# பரீட்சகரின் அறிக்கை

## AA1 பரீட்சை – 2018 யூலை

## (AA15) வியாபாரத் தொழிற்பாடுகளும் முகாமைத்துவமும்

---

இவ்வினாப்பத்திரத்தின் நோக்கம், பாடத்தின் சகல பரப்புகளினதும் ஒட்டுமொத்த அறிவைப் பரீட்சிப்பதாக இருந்தது. ‘‘வியாபாரத் தொழிற்பாடுகளும் முகாமைத்துவமும்’’ தொடர்பான நடைமுறை நிலைமைகள்கூட பரீட்சிக்கப்பட்டன. பரீட்சகரின் அறிக்கையினுடைய பிரதான நோக்கம், எதிர்காலப் பரீட்சைகளில் பரீட்சார்த்திகளின் செயலாற்றுகையை மேம்படுத்துவதற்கு உதவும் வகையில் பரீட்சார்த்திகளால் குறைவான புள்ளிகள் பெறப்பட்ட பாடப் பரப்புகள் மீது கவனத்தைச் செலுத்துவதாகும்.

மிகவும் வரையறுக்கப்பட்ட எண்ணிக்கையிலான பரீட்சார்த்திகளைத் தவிர, ஏனைய பரீட்சார்த்தி களால் இப்பரீட்சையில் நன்றாக விடையளிப்பதற்கு முடிந்திருந்தது. விடைகளிலிருந்து அவதானிக்கப் பட்ட பொதுவான ஒரு சில பலவீனங்கள் கீழே தரப்படுகின்றன:

<u>**பகுதி A**</u>

### வினா இல. 01

பரீட்சார்த்திகள் இவ்வினாவுக்கு திருப்திகரமாக விடையளித்துள்ளனர் என்பது பரீட்சகர்களின் கருத்தாகக் காணப்படுகிறது. ஒரு சில பரீட்சார்த்திகள் உயர்ந்தபட்சப் புள்ளிகளைப் பெற்றிருந்த துடன் பெரும்பாலானவர்கள் 20 இற்கும் மேற்பட்ட புள்ளிகளைப் பெற்றிருந்தனர். மேலும் சில பரீட்சார்த்திகள் விடைத்தாள் புத்தகத்தில் வினா மற்றும் விடைகளின் எண்களை எழுதுவதற்குப் பதிலாக விடைகளை எழுதியிருந்தனர். இவ்வினாவின் **1.8, 1.11, 1.13, 1.15, 1.18** ஆகிய உப பிரிவுகளுக்காக வழங்கப்பட்ட விடைகள் சரியாக வழங்கப்பட்டிருக்கவில்லை. வினாக்கள் தொடர்பான அவதானிப்புகள் பின்வருமாறு :

**1.8** நிறுவனம் ஒன்றிற்கு ஊழியர் ஒருவரின் முறைசார் அறிமுகம் பற்றியே இவ்வினாவின் மூலம் கேட்கப்பட்டிருந்தது. பெரும்பாலான பரீட்சார்த்திகள் தெரிவுசெய்திருந்த ‘‘ஆட்சேர்ப்பு’’ என்பது பிழையான விடையாகும்.

**1.11** வேலைக் குறிப்பீடு பற்றிய இவ்வினாவுக்கு ‘‘விசேட பௌதிகத் தகைமைகள்’’ என்பது சரியான விடையாக இருந்த போதிலும், இந்தப் பாடப் பரப்பு மீது சரியான புரிதலின்மை காரணமாக பரீட்சார்த்திகளால் பிழையான விடைகள் தெரிவுசெய்யப்பட்டிருந்தன.

**1.13** உண்மைச் சந்தை பற்றி வினவியிருந்த இவ்வினாவுக்கு மிகவும் மோசமாகவே விடையளிக் கப்பட்டிருந்தன. தரப்பட்ட எந்தவொரு வகைச் சந்தை தொடர்பாகவும் எவ்வித அறிவையும் பரீட்சார்த்திகள் கொண்டிருக்கவில்லை என்பது தெளிவாகத் தெரிகிறது.

**1.15** வசதிகள் அமைப்புத் திட்டத்தின் ஓர் நோக்கமாக அமையாதது எதுவெனக் கேட்கப்பட்ட இவ்வினாவுக்கு ‘‘தொழிலாளர் புரள்வை அதிகரித்தல்’’ என்பது சரியான விடையாக இருந்த போதிலும் வசதிகள் அமைப்புத் திட்டம் பற்றிய புரிதலில் காணப்படும் குறைபாடு காரணமாக பிழையான விடைகளே அளிக்கப்பட்டிருந்தன.

**1.18** தொழில்நுட்ப அபிவிருத்தி என்பது போட்டரின் பெறுமதிச் சங்கிலியிலுள்ள துணை நடவடிக்கை ஒன்றாகும். எவ்வாறாயினும், இந்த எண்ணக்கரு பற்றி சரியான புரிதலைக் கொண்டிருக்காத பெரும்பாலான பரீட்சார்த்திகள் பிழையான விடையான சந்தைப்படுத்தலும் விற்பனையும் என்பதைத் தெரிவுசெய்திருந்தனர்.

**இவ்வினாவுக்கான ஒட்டுமொத்த செயலாற்றுகை திருப்திகரமானது.**

## பகுதி B

இப்பகுதியானது விடையளிப்பதற்காக 04 கட்டாய வினாக்களைக் கொண்டிருந்தது. அவை ஒவ்வொன்றுக்கும் 10 புள்ளிகள் வீதம் வழங்கப்பட்டிருந்தன.

## வினா இல. 02

### பகுதி (a)

தனியுரிமை வியாபாரம் ஒன்றின் அனுகூலங்கள் மற்றும் பிரதிகூலங்களைக் குறிப்பிடுவது இங்கு தேவையானதாக இருந்தது. பெரும்பாலான பரீட்சார்த்திகள் 3 அல்லது அதற்கும் அதிகமான புள்ளிகளைப் பெற்றிருந்ததையும் வரையறுக்கப்பட்ட எண்ணிக்கையிலான பரீட்சார்த்திகள் மாத்திரம் குறைந்தளவான புள்ளிகளைப் பெற்றிருந்ததையும் காணக்கூடியதாக இருந்தது. மேலும், அனுகூலங்களை எழுதுவதற்குப் பதிலாக பண்பியல்புகளையும், தொடர்பற்ற விடயங்களையும் எழுதியிருந்த பரீட்சார்த்திகளும் காணப்பட்டனர்.

### பகுதி (b)

இவ்வினா வியாபார நிறுவனங்கள், வங்கிகள் மற்றும் நிதி நிறுவனங்களிடமிருந்து உதவிச் சேவைகளாகப் பெறக்கூடிய சேவைகளைக் குறிப்பிடுமாறு கேட்டிருந்தது. பெரும்பாலான பரீட்சார்த்திகள் 3 அல்லது அதற்கும் அதிகமான புள்ளிகளைப் பெற்றிருந்ததுடன் வரையறுக்கப்பட்ட எண்ணிக்கையிலான பரீட்சார்த்திகள் மாத்திரம் குறைந்தளவான புள்ளிகளைப் பெற்றிருந்தனர். அத்துடன் குத்தகை வசதிகள், மிகை ஊதியங்கள், வெகுமதிகள் மற்றும் காப்புறுதிச் சேவைகள் போன்ற பொருத்தமற்ற விடைகளை வழங்கியிருந்தமையும் அவதானிக்கப்பட்டது.

## வினா இல. 03

### பகுதி - A

இவ்வினா வியாபார நிறுவனமொன்றிற்கு தர முகாமைத்துவத்தின் முக்கியத்துவத்தை விபரிக்குமாறு கோரியிருந்தது. சில பரிமாணங்களுக்கு பரீட்சார்த்திகள் புள்ளிகளை ஈட்டியிருந்தனராயினும் அவர்களால் உயர்ந்தபட்சப் புள்ளிகளைப் பெற இயலவில்லை. வினாவை விளங்கிக்கொள்ளாது விடைகள் வழங்கப்பட்டிருந்தன. வியாபார நிறுவனமொன்றிற்கான தர முகாமைத்துவத்தின் முக்கியத்துவத்தை எழுதுவதற்குப் பதிலாக நுகர்வோருக்கான தர முகாமைத்துவத்தின் முக்கியத்துவங்களை எழுதியிருந்த சந்தர்ப்பங்களும் காணப்பட்டன. வினாவைச் சரியாக வாசித்து விளங்கிக்கொள்ளாமையே இதற்கான காரணமாக இருக்க முடியும்.

### பகுதி - B

இவ்வினாவின் மூலம் உற்பத்தி செய்யப்பட்ட பொருட்களின் 4 தர ரீதியான அம்சங்களை அடையாளம் காண்பது தேவைப்படுத்தப்பட்டது. பரீட்சார்த்திகள் தர அளவீட்டை விளங்கிக் கொள்ளாது இவ்வினா பற்றிய சரியான சிந்தனையின்றி மோசமாக விடையளித்திருந்தனர். அதேபோன்று பொதியிடல், விலை, காலாவதியாகும் திகதி போன்ற பிழையான விடைகள் எழுதப்பட்டிருந்ததையும் காணக்கூடியதாக இருந்தது.

## வினா இல. 04

### பகுதி (a)

நிறுவனமொன்றிற்கு மனித வள முகாமைத்துவத்தின் முக்கியத்துவம் பற்றி விபரிக்கவேண்டி யிருந்தது. இப்பகுதிக்கு வழங்கப்பட்ட விடைகள் மோசமானதொரு மட்டத்தில் காணப்பட்டன. பெரும்பாலான பரீட்சார்த்திகள் குறைந்தளவு புள்ளிகளையே பெற்றிருந்தனர். மிகவும் வரையறுக்கப்பட்ட எண்ணிக்கையிலான பரீட்சார்த்திகளே முழுப் புள்ளிகளையும் பெற்றிருந்த அதே வேளை சில பரீட்சார்த்திகள் சராசரிப் புள்ளிகளைப் பெற்றிருந்தனர். மனித வள முகாமைத்துவத்தின் முக்கியத்துவத்தை எழுதுவதற்குப் பதிலாக, அதன் வரலாறு மற்றும் தொழிற்பாடுகள் பற்றி எழுதப்பட்டிருந்தமையானது வினாவானது சரியாக விளங்கிக்கொள்ளப்படவில்லை என்பதையே காட்டுகிறது. விடைகள் தொடர்பான விபரிப்புகள்கூட செய்யப்பட்டிருக்கவில்லை.

### பகுதி (b)

இங்கு பயிற்சியளித்தல் செயன்முறையில் உள்ளடங்கியுள்ள படிமுறைகளை அடையாளம் காணுமாறு கேட்கப்பட்டது. இப்பகுதிக்கான செயலாற்றுகை குறைந்த மட்டத்திலேயே காணப்பட்டது. மிகக் குறைந்த எண்ணிக்கையிலான பரீட்சார்த்திகள் மாத்திரமே சரியான விடைகளை வழங்கியிருந்தனர். செயன்முறைகளின் படிமுறைகளை எழுதுவதற்குப் பதிலாக பயிற்சி முறைகள் எழுதப்பட்டிருந்தன. குறிப்பிட்டளவு பரீட்சார்த்திகள் ஆட்சேர்ப்புப் செயன்முறையின் படிமுறைகளை எழுதியிருந்தனர். பரீட்சார்த்திகளால் அதிகளவில் திருப்தியற்ற விடைகள் எழுதப்பட்டிருந்த வினா இதுவாகும்.

## வினா இல. 05

### பகுதி (a)

வியாபார நிறுவனம் ஒன்றிற்கு சந்தைப்படுத்தல் ஏன் முக்கியமானது என்பதற்கான காரணங்களை விபரிக்க வேண்டியிருந்தது. பரீட்சார்த்திகள் இவ்வினாவுக்கு மிகக் குறைந்தளவு புள்ளிகளையே ஈட்டியிருந்தனர். ஒரு சிலர் மாத்திரமே முழுப் புள்ளிகளையும் பெற்றிருந்தனர். நடைமுறை உணர்விலிருந்து சந்தைப்படுத்தல் எண்ணக்கரு பற்றிய அறிவைக் கொண்டிருந்த போதிலும் அது வியாபார நிறுவனமொன்றிற்கு எவ்வாறு முக்கியத்துவம் வாய்ந்ததாக மாறுகிறது என்பது பற்றிய புரிதல்களைப் பரீட்சார்த்திகள் கொண்டிருக்காமையே குறைந்தளவு புள்ளிகள் பெறப்படக் காரணமாக இருந்திருக்கும் என்பது தெரிகிறது.

### பகுதி (b)

வெற்றிகரமான பண்டக்குறி ஒன்றின் 4 பண்பியல்புகளை அடையாளம் காணுமாறு இவ்வினாவில் கேட்கப்பட்டிருந்தது. பரீட்சார்த்திகள் இவ்வினாவுக்கு மிகக் குறைந்தளவு புள்ளிகளையே பெற்றிருந்தனர். பெரும்பாலான பரீட்சார்த்திகளிடம் பண்டக்குறி ஒன்றின் பண்பியல்புகள் பற்றிய புரிதல்கள் காணப்படவில்லை என்பதும் அவர்களிடம் இப்பாடப் பரப்பு பற்றி மிகக் குறைந்த மட்டத்திலான அறிவே காணப்படுகிறது என்பதும் வழங்கப்பட்டிருந்த பிழையான விடைகள் சுட்டி நிற்கின்றன. இவ்வினாவுக்கு விடையளித்திருந்த அதிகளவான பரீட்சார்த்திகளிடம் பண்டக்குறித் தந்திரோபாய அடிப்படை எண்ணக்கருக்கள் பற்றிய அறிவு குறைவாகக் காணப்பட்டமை தெரிகிறது. இது சுய கற்றல் புத்தகத்தைச் சரியாகப் படிக்கவில்லை என்பதைக் காட்டுகிறது.

## பகுதி C

இப்பகுதி 20 புள்ளிகளுக்காக 01 கட்டாய வினாவைக் கொண்டுள்ளது.

## வினா இல. 06

### பகுதி (a)

இங்கு, தரப்பட்ட நிறுவனம் மீது உலகமயமாதல் எவ்வாறு சாதகமான தாக்கத்தை ஏற்படுத்தி யிருக்கிறது என்பதை விபரிக்குமாறு கேட்கப்பட்டது. பெரும்பாலான பரீட்சார்த்திகள் இதற்குச் சரியாக விடையளித்திருந்தனர். அவர்கள் திருப்திகரமான மட்டமொன்றில் புள்ளிகளைப் பெறுவதற்காக விடய ஆய்வில் தரப்பட்டிருந்த தகவல்களை விளைதிறன்மிக்க வகையில் பயன்படுத்தியிருந்தனர். பெரும்பாலானவர்களுக்கு முழுப் புள்ளிகளையும் ஈட்டக்கூடியதாக இருந்தது.

### பகுதி (b)

விடய ஆய்வில் தரப்பட்டிருந்த விடயங்களிலிருந்து பெரும்பாலான பரீட்சார்த்திகள் கம்பனியின் சந்தைப்படுத்தல் கலவையை (4Ps) அடையாளம் கண்டிருந்ததுடன் திருப்திகரமான விடைகளையும் வழங்கியிருந்தனர். எவ்வாறாயினும், ஒரு சிலர் பிழையாக விபரித்திருந்ததுடன் விடய ஆய்வில் தரப்பட்டிருந்த மேம்படுத்தல் மற்றும் இடம் ஆகியவற்றைச் சரியாக விளங்கிக்கொண்டிருக்கவில்லை.

### பகுதி (c)

இங்கு வியாபாரச் செயன்முறை வெளிமூலமிடலின் அனுகூலங்கள் மற்றும் பிரதிகூலங்களைக் குறிப்பிடுமாறு கோரப்பட்டது. பெரும்பாலான பரீட்சார்த்திகள் இதனை விளங்கிக்கொண்டிருக்கவில்லை என்பதை அவதானிக்கக்கூடியதாக இருந்தது. 6 ஆவது வினாவின் இந்தப் பகுதிக்கான பரீட்சார்த்தி களின் விடைகள் தொடர்ந்தும் மோசமான மட்டத்திலேயே காணப்பட்டது. பெரும்பாலானவர்கள் சரியான விடையை வழங்குவதற்குத் தவறியிருந்தமையைக் காணக்கூடியதாக இருந்தது. சில பரீட்சார்த்திகளிடம் ‘‘வியாபாரச் செயன்முறை வெளிமூலமிடல்’’ தொடர்பில் எவ்வித சிந்தனையும் காணப்படவில்லை என்பதை வழங்கப்பட்டிருந்த பிழையான விடைகள் சுட்டிக் காட்டுகின்றன.

### பகுதி (d)

இப்பகுதியானது தரப்பட்ட கம்பனியின் 4 நாட்டதாரர்களை அடையாளம் காணத் தேவைப்படுத்தி யிருந்தது. சகல பரீட்சார்த்திகளும் இப்பகுதிக்குச் சரியாக விடையளித்திருந்ததுடன் அதற்குரிய முழுப் புள்ளியான 4 புள்ளிகளையும் பெற்றிருந்தனர். ஒரு சிலர் மாத்திரமே முழுப் புள்ளிகளையும் பெறத் தவறியிருந்தனர்.

வினா இல. 6 ஆனது ஒரு நடைமுறை வினாவாக இருந்ததுடன் பெரும்பாலான பரீட்சார்த்திகள் அவர்களுடைய விடைகள் மூலம் அதிக புள்ளிகளைப் பெறுவதற்காக இவ்வினாவின் மீது அதிகளவான கவனத்தைச் செலுத்தியிருந்தமையும் அவதானிக்கப்பட்டது.

அதிக எண்ணிக்கையிலான பரீட்சார்த்திகள் வினா இல. 1 மற்றும் வினா இல. 6 ஆகியவற்றுக்கு சரியான விடைகளை அளித்ததன் ஊடாக வியாபாரத் தொழிற்பாடுகளும் முகாமைத்துவமும் பாடத்தில் சித்தியடையக்கூடியதாக இருந்தமையை அவதானிக்கக்கூடியதாக இருந்தது.

- - -

## பரீட்சார்த்திகளின் விளங்கிக்கொள்ளும் மட்டத்தினை விருத்திசெய்வதற்கு கவனத்திற்கொள்ளவேண்டிய பொதுவான விடயங்கள்

1. வினாப்பத்திரத்தைக் கையில் எடுத்ததும் தரப்பட்ட அறிவுறுத்தல்களைக் கவனமாக வாசிக்கவும். வினாப்பத்திரத்திலேயே விடை எழுத வேண்டாம்.

2. இலங்கை கணக்கீட்டுத் தொழில்நுட்பவியலாளர் கழகத்தினால் வெளியிடப்பட்ட **சுய கற்றல் புத்தகம்** முழுமையான பாடத்திட்டத்தை உள்ளடக்கி சிறந்த வழிகாட்டல்களை வழங்கியிருப்பதால் அதிலிருந்து உச்சபட்ச பயனைப் பெற்றுக்கொள்க.

3. வினாவை பல தடவைகள் வாசித்து வினாவில் கேட்கப்பட்டதற்கு மாத்திரம் விடையளிக்கவும். வினாவில் நேரடியான மற்றும் துல்லியமானதொரு விடை எதிர்பார்க்கப்படும் சந்தர்ப்பத்தில் தேவையற்ற விபரிப்புகளையும் விபரங்களையும் எழுத வேண்டாம்.

4. பரீட்சை எழுதும்போது நேர முகாமைத்துவம் முக்கியமானது.

5. வரைவிலக்கணங்களுடன்கூடிய **செயல் வினைச் சொல் நிரல்** இணைக்கப்பட்டுள்ளது. நோக்கச் சோதனை வினாக்களைத் தவிர ஏனைய ஒவ்வொரு வினாவும் ஒரு **செயல் வினைச் சொல்லைக்** கொண்டிருக்கிறது. பரீட்சார்த்திகள், செயல் வினைச் சொல் நிரலில் தரப்பட்ட வினைச் சொல் **வரைவிலக்கணத்தை** அடிப்படையாகக் கொண்டு வினாக்களுக்கு விடையளித்தல் வேண்டும்.

6. விடைத்தாளை ஒப்படைப்பதற்கு முன்னர், வினா இலக்கங்கள் மற்றும் உங்களது சுட்டிலக்கம் என்பன சரியாக எழுதப்பட்டுள்ளதா என்பதைப் பரீட்சிக்கவும்.

7. வினாப்பத்திரத்திலேயே விடைகளை எழுதி அதனை விடைத்தாளுடன் இணைத்து அனுப்ப வேண்டாம்.

8. கடந்தகால வினாப்பத்திரங்களுக்கு விடையளித்துப் பயிற்சி பெறுவதன் மூலம் நீங்கள் பாடம் சம்பந்தமான அறிவினை மேம்படுத்திக்கொள்ள முடியும் என்பதுடன் விடைகளை எழுதுவதற்கான ஆற்றலும் கிடைக்கும்.

9. அறிவினை நிகழ்நிலைப்படுத்திக்கொள்வதற்காக அண்மையில் பிரசுரிக்கப்பட்ட சஞ்சிகைகள், கையேடுகள், பாடப்புத்தகங்கள் போன்றவற்றைப் பயன்படுத்துக.

10. வினாக்களுக்கு விடையளிக்காது இருப்பதற்கு முயற்சிக்க வேண்டாம். இப்பழக்கம் குறைந்த புள்ளிகளையே பெறுவதற்கு வழிவகுக்கும்.

11. நல்ல முன்னாயத்தத்துடன் பெரும்பாலும் பரீட்சையில் சித்தியடையும் நம்பிக்கையுடனும் பரீட்சைக்குத் தோற்றவும்.

- * * * -